PRS®
Silks | Textiles | Ready mades
Tindivanam | Gingee

Tindivanam Times
திண்டிவனம் டைம்ஸ்
Weekly News Paper - Every Sunday
Volume.1, Issue.36 Feb 08 - 14, 2026 8 Pages Rs.2/-
PRGI Regd. No.TNBIL/25/A0215

NITHYASRI
BATTERY


#38C, Rajaji St, (Next to HDFC Bank)
Tindivanam.
Mobile: 9500998599

Contact: 9655624449 e-mail: tindivanamtimes@gmail.com / Tindivanam Times website.tindivanamtimes.com

# அமெரிக்காவுடன் ஒப்பந்தத்தால் விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லை

## மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம்



புதுடெல்லி : இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம், இந்திய ஏற்றுமதிகளுக்கு மிகப் பெரிய வாய்ப்பை உருவாக்கி இருக்கும் அதேநேரத்தில் விவசாயி களுக்கு பாதிப்பு இல்லை என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான கூட்டறிக்கை வெளியிடப்பட்டதை அடுத்து நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், கூறியிருப்பதாவது;

‘‘இந்திய அமெரிக்க கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இரு தரப்புக்கும் நன்மை பயக்கும் வர்த்தகம் தொடர்பான ஒரு இடைக்கால ஒப்பந்தத் துக்கான கட்டமைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் பரந்த அளவில் இருப்பதை பேச்சுவார்த்தை மூலம் இறுதி செய்வதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என தெரிவித்துள்ளார்.

மேலும் நிர்மலா சீதாராமன் அலுவலகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவுகளில், ‘‘இந்திய அமெரிக்க இடைக்கால ஒப்பந்த கட்டமைப்பு, இந்தியாவின் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் ஒருங்கிணைக்க ஆதரவு அளிக்கும். மேலும், வணிகங்கள் மற்றும் நுகர்வோருக்கான செலவுகளைக் குறைக்கும். இந்த இடைக்கால ஒப்பந்தம், டிஜிட்டல் சேவைகள் துறையில் இந்தியாவின் தலைமைத்துவத்தை வலுப்படுத்தும். மேலும் கூட்டு தொழில்நுட்ப ஒத்துழைப்பு, இந்தியாவை செயற்கை நுண்ணறிவு, தரவு, டிஜிட்டல் சேவைகளுக்கான ஒரு மையமாக நிலைநிறுத்தும்.

இந்தியா தனது விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைகளின் நலன்களைப் பாதுகாத்துள்ளது. முக்கிய விவசாயப் பொருட்கள் மற்றும் பால் பண்ணைப் பொருட்கள், மசாலாப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவற்றின் உள்நாட்டு உற்பத்தியைப் பாதுகாத்து, விவசாயிகளின் வருமானத்தை வலுப்படுத்துகிறது, இந்த ஒப்பந்தத்தல் விவசாயிகளுக்கு பாதிப்பு எதுவும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமானப் படையிடம் ஒப்படைக்க 5 தேஜஸ் எம்கே1ஏ விமானங்கள் தயார்: எச்ஏஎல் நிறுவனம் அறிவிப்பு

இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனம் (எச்ஏஎல்) உள்நாட்டில் தேஜஸ் இலக ரக போர் விமானத்தை தயாரிக்கிறது. இந்நிலையில் எச்ஏஎல் நிறுவனத்திடம் விமானப்படை 83 தேஜஸ் எம்கே1ஏ ரக விமானங்களை தயாரிக்க கடந்த 2021ம் ஆண்டு ஆர்டர் கொடுத்தது. அதன்பின் 97 தேஜஸ் எம்கே1ஏ ரக விமானங்களை ரூ.62,370 கோடி மதிப்பில் தயாரிக்க கடந்த 2025ம் ஆண்டு ஒப்பந்தம் செய்தது.

தேஜஸ் போர் விமானங்களை தயாரித்து வழங்குவதில் எச்ஏஎல் நிறுவனம் தாமதப்படுத்துவதாக விமானப் படை தளபதியே ஒருமுறை குற்றம் சாட்டினார். இதற்கு பதில் அளித்த எச்ஏஎல் நிறுவனம் தேஜஸ் போர் விமானத்தில் பயன்படுத்தப்படும் அமெரிக்க தயாரிப்பு ஜிஇ இன்ஜினை பெறுவதில் தாமதம் ஏற்படுவதால், தேஜஸ் போர் விமானத்தை குறித்த நேரத்தில் விநியோகம் செய்ய முடியவில்லை என கூறியது.

இந்நிலையில் எச்ஏஎல் நிறுவனம் விடுத்துள்ள செய்தியில், ‘‘அமெரிக்கவின் ஜிஇ நிறுவனத்திடம் இருந்து 5 இன்ஜின்கள் இதுவரை வந்துள்ளன. அந்த இன்ஜின்கள் பொருத்தப்பட்டு 5 தேஜஸ் எம்கே1ஏ ரக விமானம் விமானப்படையிடம் ஒப்படைக்க தயார் நிலையில் உள்ளது.

ஐஎம்ஆர்எச் ஹெலிகாப்டர், தேஜஸ் எம்கே2 போன்ற விமானங்கள் தயாரிப்பில் எச்ஏஎல் 2032ம் ஆண்டுக்கு பிறகு ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது’’ என தெரிவித்துள்ளது.

# என் கனவு என் எதிர்காலம் என்ற புதிய இணையதளம் திண்டிவனம் விழாவில் முதல்வர் தொடங்கி வைத்தார்




**திண்டிவனம்:** தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பின்பு, கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. சமூக பாதுகாப்பு திட்ட ஓய்வூதியங்களின் கீழ், முதியோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளி களுக்கான ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம், ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியம், 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியம், முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கான ஓய்வூதியம் ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் மற்றும் இசேவை மையங்கள் மூலமாக, சமூக பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியம் கோரி விண்ணப்பித்த மனுதாரர்களுக்கும், கள ஆய்வின் அடிப்படையில், 1.80 இலட்சம் மனுதாரர்களுக்கு (இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியம் 1,02,960, மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம் 53,764 ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியம் 22,799 உள்ளிட்டவை) ஆகியவற்றை வழங்கினார்.

இதனால் அரசுக்கு, ஆண்டொன்றிற்கு, கூடுதலாக சுமார் ரூ.260 கோடி செலவாகும்.

தமிழ்நாட்டில், ஏற்கனவே 33,60,192 பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியத்தினை ‘தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள 1,82,967 பயனாளிகளையும் சேர்த்து, மொத்தமாக 35 லட்சத்து 43,159 பயனாளிகள் பயன்பெறுவர். இத்திட்டத்திற்காக இவ்வாண்டு, 5,295 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் “உங்க கனவ சொல்லுங்க”என்ற திட்டம் தமிழ்நாடு முதலமைச்சரால் கடந்த மாதம் 9ம்தேதி திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. சுமார் 50,000 தன்னார்வலர்களைக் கொண்டு இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தினை செயல்படுத்தி, இளைஞர்களின் கனவுகளை பதிவு செய்யும் பொருட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலம், ‘என் கனவு, என் எதிர்காலம்’என்ற இணையதளம் (enkanavu.tn.gov.in) உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் திண்டிவனம் விழாவில் இந்த இணையதளத்தை தொடங்கி வைத்தார். பதிவாகும் கனவுகளின் அடிப்படையில், இளைஞர் நலனிற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு அவர்களின் எதிர்கால கனவுகள் நிறைவேற்றப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரம் செய்ய
அணுகவும்
9655624449

# இறைவழியில் தர்மம் செய்தால்..?



நபி தோழர் அலி அவர்களும் அவருடைய மகன் ஹசனும் பள்ளிவாசலில் நின்றிருந்தனர்.

அப்போது யாசகர் ஒருவர் வந்து அலியிடம் ஏதேனும் உதவும் படி கேட்டார்.

வீட்டு செலவுக்காக கையில் இருந்த ஆறு திர்ஹங்களையும் மனைவிடம் கொடுத்து விட்டதால் அவரிடம் கைவசம் ஏதும் இருக்கவில்லை.

அந்த யாசகரை வெறுமனே திருப்பி அனுப்பவும் அவருக்கு மனம் இல்லை.

உடனே மகனை அழைத்து மகனே நீ வீட்டிற்கு சென்று நான் கொடுத்து வந்த ஆறு திர்ஹங்களில் ஒரு திர்ஹகத்தை வாங்கி வா என்று சொல்லி அனுப்பினார்.

போன வேகத்திலேயே மகன் வெறுங்கையுடன் திரும்பி வந்தான். வீட்டிற்கு தேவையான உணவு பொருட்கள் வாங்க அந்த காசு மட்டும் தான் இருக்கிறதாம். அதனால் அம்மா திர்ஹம் ஏதும் தரவில்லை என்றான்.

அலி விடவில்லை உணவளிப்பவன் இறைவன் தான் ஆகவே நீ மீண்டும் சென்று நான் கொடுத்த ஆறு திர்ஹங்களையும் கேட்டேன் என்று வாங்கி வா என்று மகனை விரட்டினார்.

முதலிலேயே கொடுத்தி ருந்தால் ஒரு திர்ஹகத்தோடு முடிந்தி ருக்கும் இப்போது ஆறு திர்ஹங்களையும் கேட்கிறாரே.! வீட்டிலோ ஒரு மணி அரிசி கூட இல்லையே என்ற கவலை உள்ளுக்குள் ஓடினாலும் கணவனின் கட்டளைப்படி முழு தொகையையும் அலியின் மனைவி கொடுத்து அனுப்பினார்.

அந்த ஆறு திர்ஹங்களையும் வாங்கி அப்படியே யாசகம் கேட்ட அவருக்கு தர்மமாக வழங்கி விட்டார்.

அலி தம் வீட்டில் ருத்ர தாண்டவம் ஆடும் வறுமையைப் பற்றி எல்லாம் அவர் சற்றும் யோசிக்கவில்லை.

நீங்கள் மற்றவருக்கு உதவினால் உங்களுக்கு பத்தாக இறைவன் தருவான் எனும் இறைவனின் வாக்குறுதி மீது நம்பிக்கை கொண்டவராக அந்த ஏழைக்கு உதவி செய்து அவரை மன நிறைவோடு வழி அனுப்பினார் அலி.

இது நடந்து முடிந்த சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு ஒட்டக வியாபாரி தம் ஒட்டகத்தை விற்பதற்காக அழைத்து வந்தார்.

அலியிடம் அந்த ஒட்டகத்தை வாங்கிக் கொள்ளும்படி வேண்டினார். அலி அவர்களும் எவ்வளவு விலை என்று விசாரித்தார். 140 திர்ஹங்கள் என்றார் ஒட்டக வியாபாரி சரி வாங்கிக் கொள்கிறேன்.

ஆனால் உடனடியாக பணம் தர முடியாது இரண்டு நாள் தவணைத் தாருங்கள் என்றார் அலி.

வியாபாரியும் சம்மதித்து ஒட்டகத்தை அவரிடம் ஒப்படைத்து விட்டு சென்று விட்டார்.

அவர் சென்ற சிறிது நேரத்திற்குள்ளேயே அங்கு வந்த இன்னொரு மனிதர் அந்த ஒட்டகத்தை பார்த்தார்.

அது அவருக்கு மிகவும் பிடித்து விட்டது தான் இந்த ஒட்டகத்தை வாங்கிக் கொள்ள விரும்புகிறேன் அலியிடம் தன் விருப்பத்தை சொன்னார்.

என்ன விலையை தருவீர்கள் என்று அலி கேட்டார் 200 திர்ஹம் தருகிறேன் என்றவர் கையோடு பணத்தையும் எடுத்துக் கொடுத்து வியாபாரம் முடிந்தது.

இந்த வியாபாரத்தில் அலி அவர்களுக்கு 60 திர்ஹங்கள் லாபம் கிடைத்தது.

அலி அவர்கள் தம் மகனிடம் பார்த்தாயா மகனே இறைவனின் அருளை இறைவழியில் தர்மம் செய்தால் நீங்கள் செய்த தர்மத்தை விட பத்து மடங்கு நான் உங்களுக்கு திருப்பி தருவேன் எனும் இறைவனின் வாக்குறுதி எவ்வளவு உண்மையாகி விட்டது என்றார் நெகிழ்ச்சியுடன்.

அடுத்த இதழில் சந்திப்போம்..!



பேரா.முனைவர்.பி.வனத்தையன்
திண்டிவனம்.

விளம்பரம் செய்ய அணுகவும்
9655624449

ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் துணை

**ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில், சாரம் கிராமம்.**



ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் கும்பாபிசேக கலசம் பொதுமக்கள் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்படுகிறது. தங்களால் இயன்ற நிதியளித்து ஆதிகேசவப் பெருமாள் அருளுக்கு பாத்திரமாகும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
**கிராமப் பொதுமக்கள்,**
சாரம் கிராமம்.
தொடர்புக்கு: 9944125365

# சட்டப்பேரவை தேர்தலுக்காக சில புதிய முயற்சிகள் தலைமை தேர்தல் ஆணையர்

**புதுடெல்லி:** வர இருக்கும் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்கம், அசாம் ஆகிய 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்கள் இன்னும் சில மாதங்களில் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு, மத்திய பார்வையாளர்களுக்கான விளக்கக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது.

மூன்று கட்டங்களாக நடைபெற்ற இந்த விளக்கக் கூட்டத்தில், 714 பொதுப் பார்வையாளர்கள், 233 காவல் துறை பார்வையாளர்கள், 497 செலவினப் பார்வையாளர்கள் உட்பட 1,444 அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் டாக்டர் சுக்வீர் சிங் சந்து, டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோர் இதில் கலந்து கொண்டு விளக்கங்களை அளித்தனர்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய ஞானேஷ் குமார், ''இந்தியாவில் தேர்தல்கள் சட்டத்தின்படியும், தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுறுத்தல்களின்படியும் நடத்தப்படுகின்றன. இதில் இருந்து விலகுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

சட்டத்தையும் இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்களையும் தேர்தல் பார்வையாளர்கள் பின்பற்ற வேண்டும். கடந்த ஓராண்டில் தேர்தல் ஆணையத்தால் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. வர இருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல்களுக்காக சில புதிய முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

சுதந்திரமான, நியாயமான, வெளிப்படையான முறையில் தேர்தல்கள் நடப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்'' என கேட்டுக்கொண்டார்.

**உங்கள் பகுதி நிகழ்ச்சிகளை செய்தியாக வெளியிட கீழ்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்புங்கள்**
**96556 24449**

Readers are recommended to make appropriate enquires before entering into deals with advertisers who advertise in this publication. The Editor and Publisher do not vouch for any claims made by advertisers and hence shall not be held liable for any adverse consequences.

## திண்டிவனத்தில்

# புதிய பேருந்து நிலையம் கோலாகலமாக திறப்பு



**திண்டிவனம்:** திண்டிவனம் புதிய பேருந்து நிலைய திறப்பு விழாவில் நகராட்சி சேர்மன் நிர்மலா குத்துவிளக்கேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான புதிய பேருந்து நிலையம் திண்டிவனம் சென்னை தேசிய நெடுஞ் சாலையில் பல கோடி செலவில் பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் கட்டப்பட்டுள்ளது. இதற்கு அன்னை இந்திராகாந்தி பேருந்து நிலையம் என பெயரிடப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சியின் வாயிலாக திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் பேருந்து நிலையத்தில் குத்துவிளக்கேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து நகராட்சி ஆணையாளர் பானுமதி மற்றும் பொறியாளர் புவனேஸ்வரி, நகர மன்ற துணைத் தலைவர் ராஜலஷ்மி, நகர மன்ற உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், பாஸ்கர், பார்த்திபன், பாபு, ராம்குமார், சதிஷ், சரவணன், ஷபியுல்லா, சுதா, நியமன கவுன்சிலர் சரவணன் மற்றும் நகரின் முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திண்டிவனம் புதிய பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்துகளை இயக்க கோரிக்கை

**திண்டிவனம்:** விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் 27.51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக திறக்கப்பட்ட இந்திராகாந்தி பேருந்து நிலையத்தில் பல்வேறு குறைபாடுகள் உள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியருக்கு பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் விடுத்த கோரிக்கை:

திண்டிவனம் புதிய பேருந்து நிலையத்தின் உள்ளே எப்போதும் ஆட்டோக்கள் வந்து செல்கின்றன. இரு சக்கர வாகனங்களும் தாறுமாறாக செல்கின்றன.

இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும் குப்பைத் தொட்டி வைக்கப்படவில்லை. எனவே திண்டிவனம் நகருக்குள் செல்வதற்காக மினி பேருந்துகளை இயக்கினால் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும், இதனால் அவர்களது பயணத்திற்கான சிரமம் குறையும். இது தவிர மக்கள் பாதுகாப்புக்காகவும், ஆட்டோ, இருசக்கர வாகனங்கள் உள்ளே வருவதை தடுக்கவும் புறக்காவல் நிலையம் அமைக்கப்பட வேண்டும்.

புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்டு மூன்று நாட்கள் ஆன நிலையிலும் தனியார் பேருந்துகள் உள்ளே வந்து செல்லாததால் திண்டிவனத்தை சுற்றியுள்ள கிராம பகுதிகளுக்கு செல்ல முடியாமல் பயணிகள் கடும் அவதி அடைந்துள்ளனர். எனவே மாவட்ட ஆட்சியர் உடனடியாக தனியார் பேருந்துகளை புதிய பேருந்து நிலையத்திற்குள் அனுமதித்து பயணிகளை ஏற்றி இறக்க உத்தரவிட வேண்டும்.

மேலும் புதிய பேருந்து நிலையத்தில் முகப்பில் விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்கும் விதத்தில் சாலையின் நடுவே தடுப்பு கட்டைகளை அமைக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறி உள்ளனர்.


விளம்பரம் செய்ய அணுகவும்
9655624449

கரையானா?

உங்கள் வீடுகளில் உள்ள கரையான் (செல்)
கரப்பான்பூச்சி, மூட்டைபூச்சி, கொசு,
ஆகிய பூச்சிகளின் தொல்லைகளில்
இருந்து விடுபட



அரசு அங்கீகாரம் பெற்றது

ஸ்ரீ தவபிரியா பெஸ்ட் கண்ட்ரோல்
பாண்டி பைபாஸ் ரோடு, முதல்மாடி, நேதாஜி நகர், திண்டிவனம் - 604001
97903 32534 / 90472 75494

ஸ்ரீ முனீஸ்வரன் துணை



ஸ்ரீ சிவசக்தி
நாட்டு மருந்து கடை
SIVA SAKTHI HERBALS

எங்களிடம் கும்பாபிஷேக பொருட்கள், நாட்டு மருந்துகள், அபிஷேக பொருட்கள், பரிகாரப் பொருட்கள், இயந்திர தகடுகள் ஆகியவைகள் கிடைக்கும்.





மயான கொள்ளை வேசத்திற்கு தேவையான கிரீடம், சூலம், கபால மாலை உள்ளிட்ட அனைத்து பொருட்களும் தரமான முறையில் கிடைக்கும்.

உரிமை:
சிவசக்தி மணிகண்டன், DSMS.,
502, நேரு வீதி (காந்தி சிலை அருகில்) திண்டிவனம்.
செல்: 9080974482
7639215473

முன்பதிவு நடைபெறுகிறது முந்துகள் உங்கள் மனைக்கு

ஸ்ரீ திரௌபதியம்மன் துணை

G.K ரியல் எஸ்டேட்—ன்

அரசு அங்கீகாரம் பெற்றது : DTCP No :143/2025 RERA அனுமதி பெற்றது.

# ஸ்ரீ ஜெய் மாருதி சிப்காட் நகர்

## கொள்ளார் ( வேம்பூண்டி கிராமம் ) சிப்காட் அருகில்

## திண்டிவனம் To திருவண்ணாமலை சாலை

DTCP APPROVAL 143/2025 RERA

## 1 சதுரஅடி ரூ.700/–மட்டுமே

மனைப்பிரிவில் அலுவலகம் செயல்படுகிறது.

விபரங்களுக்கு அணுகவும் :

**G.K.ரியல் எஸ்டேட் & ஸ்ரீபாலாஜீ சூப்பர் மார்க்கெட்**

நெ.79,காந்தி பஜார்,செஞ்சி

**9994953565, 9585122122, 9442719051**

எங்களிடம் குறைந்த மனைகளே உள்ளன. உடனே உங்கள் மனையை புக் செய்யுங்கள்.

G.K ரியல் எஸ்டேட் வழங்கும்

அரசு அங்கீகாரம் பெற்றது : DTCP.No. 208/2024 RERA அனுமதி பெற்றது.

# ஸ்ரீ பாலாஜீ நகர்

## கோவிந்தசாமி காலேஜ் ரோடு, திண்டிவனம், ( மேல்பாக்கம் )

3 கி.மீ தொலைவில் சிப்காட் தொழிற்சாலை அமைந்துள்ளது.



## 1 சதுரஅடி ரூ.799/- முதல்

DTCP APPROVAL 208/2024 NUMBER

**9994953565, 9585122122, 9442719051**

## திண்டிவனம் புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் கண்டுபிடிப்புக்கு பாராட்டு



**திண்டிவனம்:** விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியில் பயின்று வரும் 12ம் வகுப்பு மாணவர்கள் 35 பேர் பள்ளி புத்தாக்கப் மேம்பாட்டு திட்டம் 4.0 போட்டியில் பங்கேற்று தங்களின் புத்தாக்க சிந்தனைகளை சமர்ப்பித்தார்கள். இதில் மாவட்ட அளவில் சிறந்த புத்தாக்க சிந்தனை அணியாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த மாணவர்களை பள்ளியின் தாளாளர் மற்றும் தலைமை ஆசிரியர் ஜான் போஸ்கோ பாராட்டிச் சான்றிதழை வழங்கினார். உதவி தலைமை ஆசிரியர் முனைவர் பொன். பாக்கியநாதன், இந்த மாணவர்களின் தலைமைத்துவ மற்றும் தொழில் முனைவோர் திறன்களை பெறுவதற்கும், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கான வழிகாட்டி ஆசிரியராகவும் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அண்ணாமலை பல்கலைக்கழக அளவில்

## ஒலக்கூர் மாணவர் ராகவன் முதலிடம்



**சிதம்பரம்:** கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கடந்த 3ம்தேதி 87 வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி கலந்துகொண்டு பட்டங்களை வழங்கினார். மேலும் சிறப்புநிலை பெற்ற மாணவர்களுக்கும் பதக்கம் வழங்கி கவுரவித்தார். இப்பட்டமளிப்பு விழாவில் திண்டிவனம், சரசுவதி கலை, அறிவியல் கல்லூரியின் காட்சித் தொடர்பு ஊடகவியல் துறை, மாணவர் ராகவன் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்று ஆளுநரிடம் பட்டம் பெற்றார்.

பட்டம் பெற்ற மாணவர் ராகவனை சரஸ்வதி கல்லூரி முதல்வர் முனைவர் வீரமுத்து, முதன்மை நிர்வாக அலுவலர் பேராசிரியர் சிவக்குமார், நிர்வாக அலுவலர் முனைவர் சிவா, பெற்றோர் ஆசிரியர் கழக ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர். தண்டபாணி, துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள் பாராட்டி வாழ்த்தினர்.

# திண்டிவனம் திமுக வேட்பாளர் ரெடி? புதிதாக சேர்ந்த ‘மாஜிக்கு ஜாக்பாட்’

**அரசியல் களம்**



**திண்டிவனம்:** 2026 சட்டமன்ற தேர்தல் திருவிழா நெருங்கிக் கொண்டிருக்கிறது. அநேகமாக ஏப்ரல் மாதம் தேர்தல் நடக்கும் என தெரிகிறது. அதற்காக இருபெரும் கூட்டணிகளான திமுக, காங்கிரஸ், விசிக, கம்யூ, மதிமுக, முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய இந்தியா கூட்டணி மற்றும் அதிமுக, பாஜக, அன்புமணி பாமக, அமமுக மற்றும் சில கட்சிகள் அடங்கிய தேசிய ஜனநாயக கூட்டணி இடையே கடும்போட்டி நிலவுகிறது. திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் ‘நலத்திட்ட நாயகன்’ என்ற பாணியில் மக்கள் நலத்திட்டங்களை வரிசை கட்டி செயல்படுத்தி வருகிறார். சமீபத்தில் கூட திண்டிவனத்தில் பல கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கியதோடு புதிய பேருந்து நிலையம், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை புதிய கட்டிடம் ஆகியவற்றை திறந்து வைத்தார். அதிமுகவும் இந்த முறை பாஜகவுடன் மீண்டும் கூட்டணி ஏற்படுத்தி முழு வேகத்தோடு தேர்தல் களத்தில் இறங்கி உள்ளது.

இதுஒரு புறம் இருக்க விழுப்புரம் மாவட்டத்தின் முக்கிய தொகுதிகளில் ஒன்றான திண்டிவனம் சட்டமன்ற தொகுதி மக்கள் கவனத்தை ஈர்த்து வருகிறது. இது தாழ்த்தப்பட்டோர் மட்டும் போட்டியிடும் தனித்தொகுதி ஆகும். இந்த தொகுதியை பொறுத்தவரை தற்போது அதிமுகவின் அர்ஜூனன் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். வரும் தேர்தலிலும் இவர் போட்டியிடுவாரா? என்பது கேள்விக்குறிதான். அதே நேரத்தில் திமுகவில் ஏற்கனவே எம்எல்ஏவாக இருந்த சீத்தாபதி சொக்கலிங்கம் மீண்டும் சீட் கேட்பாரா? என்பதும் சந்தேகம் தான். அதிமுக சார்பில் பலமான வேட்பாளரை நிறுத்தும்பட்சத்தில் திமுகவில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது மில்லியன் டாலர் கேள்விதான்.

‘செல்வாக்கு’ மிக்க நபரை நிறுத்த திமுக தலைமை யோசித்து வந்த நிலையில்தான் அதிமுக முன்னாள் எம்எல்ஏ ஹரிதாஸ், சமீபத்தில் திண்டிவனம் அரசு விழாவுக்கு வந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து திமுகவில் இணைந்துள்ளார். இது அரசியல் நோக்கர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. காரணம் திமுக சார்பில் யாரை நிறுத்துவது என்று யோசித்துக் கொண்டிருந்த நிலையில் முன்னாள் எம்எல்ஏ ஹரிதாசுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கலாம் என்றே தெரிகிறது.

காரணம் ‘செல்வாக்கு’ மிக்க நபராக திகழும் இவர் அதிமுகவில் கண்டுகொள்ளப்படாத நிலையில்தான் இருந்து வந்தார். ஹரிதாஸ் கடந்த 2011 முதல் 2016 வரை திண்டிவனம் தொகுதி அதிமுக எம்எல்ஏவாக இருந்தவர். இவர் சமீப காலமாக அதிமுக நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் அதிருப்தியில் இருந்து வந்தார். தலைமையும் கண்டுகொள்ளவில்லை. இந்த நேரத்தில்தான் ஹரிதாஸ் திமுகவில் இணைந்துள்ளார். அவர் தேர்தலில் போட்டியிடும் நோக்கத்தோடு தான் இணைந்துள்ளார் என்று தான் அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். முதல்வரும் அவரை அன்போடு வரவேற்று வாழ்த்தி உள்ளார்.

இதன் மூலம் திமுகவிற்கு புது தெம்பு ஏற்பட்டுள்ளது. அதிமுக முன்னாள் எம்எல்ஏ என்பதாலும் பிரபலமான டாக்டர் என்பதால் மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ளதால் இந்த முறை ஹரிதாசை வேட்பாளராக நிறுத்தலாம் என திமுக கருதுவதாக மக்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது. அதே நேரத்தில் நலத்திட்ட உதவிகள், தொழில் வளர்ச்சி, புதிய பேருந்து நிலையம் திறப்பு போன்றவற்றால் திமுகவிற்கு மக்கள் மத்தியில் வரவேற்பு பெற்றுள்ளது. இதனால் திமுக முத்த நிர்வாகிகளும் இந்தப்போட்டியில் களம் இறங்க அதற்கான முயற்சிகள் நடந்தாலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

தமிழக அரசு மாநிலம் முழுவதும் செய்துள்ள நலத்திட்டங்கள் குறிப்பாக திண்டிவனத்தில் சிப்காட், புதிய பேருந்து நிலையம், நகர மேம்பாடு என பல்வேறு திட்டங்கள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன. இந்த நேரத்தில் ஏற்கனவே மக்கள் மத்தியில் அறிமுகமான நபரான முன்னாள் எம்எல்ஏ ஹரிதாசை திமுக வேட்பாளராக களம் இறக்கினால் வெற்றியை உறுதியாக்கி விடலாம் என்று திமுக கணக்கு போடுகிறது. எதிர் தரப்பை பொறுத்தவரை அதிமுக தனது வேட்பாளரை நிறுத்துமா? அல்லது கூட்டணி கட்சியான அன்புமணி பாமகவுக்கு தள்ளி விடுமா? என்ற கருத்தும் உள்ளது. மொத்தத்தில் திண்டிவனம் சட்டமன்ற தேர்தல் களம் விரைவில் சூடுபிடிக்கப்போவது உறுதி.


# யோக வாழ்வு தரும் யோகா பயிற்சி

## ரத்த ஓட்டத்தை அதிகரிக்கும் புஜங்காசனம்

### ஹார்ட் சக்ரா

(அனாஹட்டா) : மார்பின் மையம்; அன்பு, இரக்கம், இணைப்பு. அனாஹத (இதய) சக்கரத்தைத் தூண்டும் யோகாசனங்கள், உணர்வுகளை வெளிக்கொணரவும், ஆற்றல் ஓட்டத்தை அதிகரிக்கவும், மார்பு, தோள்கள் மற்றும் மேல் முதுகைப் பிளந்து விரிப்பதில் கவனம் செலுத்துகின்றன.

புஜங்காசனம் பயன்கள்: புஜங்காசனம் எனப்படும் நாகாசனம் மார்பு, தோள்பட்டை மற்றும் மார்புத் தண்டுவடத்தைத் திறப்பதன் மூலம் அனஹத சக்கரத்தைத் தூண்டுகிறது. இது கூன் விழுந்த உடலமைப்பைச் சரிசெய்து, உணர்ச்சித் தடைகளை நீக்குகிறது. இந்த பின்னோக்கிய வளைவு மார்புக் கூட்டத்தை விரிவடையச் செய்து, ஆழமான சுவாசத்தையும், மேம்பட்ட ரத்த ஓட்டத்தையும், இதய மையத்திற்கு ஆற்றல் ஓட்டம் அதிகரிப்பதையும் ஊக்குவிக்கிறது.



புஜங்காசனம் செய்முறை: உங்கள் கால்களைச் சேர்த்து, கால் விரல்கள் பின்னோக்கி இருக்குமாறு, உங்கள் வயிற்றின் மீது மல்லாந்து படுத்து, நெற்றியைப் பாயின் மீது வைக்கவும். கைகளின் நிலை: உங்கள் உள்ளங்கைகளைத் தோள்களுக்கு நேர் கீழே தரையில் வைக்கவும், முழங்கைகளை உடலுடன் ஒட்டி வைத்திருக்கவும். உங்கள் கால் விரல்களையும் இடுப்புப் பகுதியையும் பாயில் அழுத்தி, தொடைத் தசைகளைச் சுருக்கவும்.

மூச்சை உள்ளிழுத்து உயர்த்தவும்: ஆழமாக மூச்சை உள்ளிழுத்து, உங்கள் கைகளை விட முதுகுத் தசைகளைப் பயன்படுத்தி, உங்கள் தலை, மார்பு மற்றும் மேல் வயிற்றுப் பகுதியை மெதுவாகப் பாயிலிருந்து உயர்த்தவும்.

தோள்களைக் காதுகளிலிருந்து விலக்கித் தளர்வாக வைத்து, நேராக அல்லது சற்று மேல்நோக்கிப் பார்க்கவும். தொப்புள் தரைக்கு அருகில் அல்லது லேசாகத் தரையைத் தொட்டுக்கொண்டிருப்பதை உறுதிப்படுத்தவும். சிரமம் ஏற்படுவதை தவிர்க்க முழங்கைகளைச் சற்று வளைத்து வைத்திருக்கவும்.

45 ஆழமான, சீரான மூச்சுகளுக்கு இந்த நிலையில் இருக்கவும். மூச்சை வெளியேற்றி, உங்கள் வயிறு, மார்பு, இறுதியாகத் தலையை மெதுவாகப் பாய்க்குத் திருப்பிக் கொண்டு வரவும்.



**A.David Doss**
Teacher..Trainer..
PRABANJA SAKTHI YOGA


# ஆட்கள் தேவை

## திண்டிவனம் டைம்ஸ் வார இதழுக்கு விளம்பரம் சேகரிக்க ஆட்கள் தேவை

## Call: 96556 24449


புதிய பேருந்து நிலையம் திறப்பையொட்டி

# திண்டிவனம் நகரில் அரசு டவுன் பஸ்களுக்கான வழித்தடங்கள் அறிவிப்பு

**திண்டிவனம்:** திண்டிவனத்தில் புதிய பேருந்து நிலையத்தை கடந்த 4ம் தேதி தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் காணொளி காட்சி மூலமாக திறந்து வைத்தார். இந்நிலையில் திண்டிவனத்தில் இருந்து இயக்கப்படும் அரசு நகர பேருந்துகளுக்கான வழித்தடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

தடம் எண் T1, T4, T5, T7, T8, T12, T12, T14, T15, T16, T17, T18, T19, T22, T24, T27, T28, T30, T34, T35, T38B, T38D, T61, T62 ஆகிய 24 பேருந்துகள் திண்டிவனம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து திண்டிவனம் மேம்பாலத்தின் கீழ்புறம் வழியாக வந்து செல்ல வேண்டும். திரும்பி வரும் போது மேம்பாலம் கீழ் வழியாக நேரடியாக வந்தும் மற்றும் புதுச்சேரி சாலை வழியாக வரும் பேருந்துகள் திண்டிவனம் நகர காவல் நிலையம் வரை சென்று யூடேர்ன் அடித்து மேம்பாலம் கீழ் வழியாக மறுபடியும் புதிய பேருந்து நிலையம் சென்று அடைய வேண்டும். எக்காரணம் கொண்டும் மேம்பாலம் மேலே செல்லக் கூடாது.

மேலும் தடம் எண் T6, T6G, T13, T23, T31, T32, ஆகிய 6 பேருந்துகள் திண்டிவனம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு அந்தந்த ஊர்களுக்கு செல்ல வேண்டும். காலையில் மாணவர்களை ஏற்றி வரும் போது திண்டிவனம் மேம்பாலம் வரை சென்று மாணவர்களை இறக்கி விட்டு விட்டு மறுபடியும் திரும்பி புதிய பேருந்து நிலையம் வர வேண்டும்.

அதேபோல் தடம் எண் T2, T9, T10, T11, T20, T25, T26, T29 ஆகிய 8 பேருந்துகள் திண்டிவனம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஆர்யாஸ் ஹோட்டல், தீர்த்த குளம், காந்தி சிலை மற்றும் செஞ்சி பஸ் ஸ்டாண்ட் வழியாக இயக்கப்பட வேண்டும். தடம் எண் T3C,T3, T36, T40 ஆகிய 4 பேருந்துகள் திண்டிவனம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து மேம்பாலம் கீழ் வழியாக திண்டிவனம் நகர காவல் நிலையம் வரை சென்று அங்கு யூடேர்ன் எடுத்து மேம்பாலத்தின் மீது செல்லும் போது மேலே பயணிகளை ஏற்றவோ இறக்கவோ கூடாது. மேம்பாலம் வழியாக வந்து நேரு வீதி, செஞ்சி பஸ் ஸ்டாண்ட் வழியாக செல்ல வேண்டும். வரும் போது தீர்த்தகுளம், திண்டிவனம் ரயில்வே மேம்பாலம் வழியாக வந்து மேம்பாலத்தின் கீழ்புறம் இறங்கி பின் புதிய பேருந்து நிலையம் வந்து சேர வேண்டும் என அரசு நகர பேருந்து ஓட்டுநர்களுக்கு போக்குவரத்து கழகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பு



திண்டிவனம்: திண்டிவனம் செஞ்சி சாலையில் உள்ள அண்ணா திடலில் பேறிஞர் அண்ணாவின் 57 ஆம் ஆண்டு நினைவு தினம் அதிமுக சார்பில் அனுசரிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு திண்டிவனம் நகர செயலாளர் ரூபன்ராஜ் தலைமையில் கழக நிர்வாகிகள் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் மாநில நிர்வாகி ஏழுமலை, மாவட்ட நிர்வாகிகள் தீனதயாளன், வெங்கடேசன், ஜெயப்பிரகாஷ், சக்திவேல்,வடபழனி, விஜயகுமார், சங்கர், வேல்முருகன், பன்னீர்செல்வம், பொதுக்குழு உறுப்பினர் தேவநாதன், அதிமுக நிர்வாகிகள் தளபதி ரவி, மணிமாறன், வினோத், உதயகுமார், ஜெயஸ்ரீ, திருமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் மாவட்ட அரசு தலைமை புதிய மருத்துவமனை ரூ. 66 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து ஏ.டி.எம்.எஸ் டாக்டர் பிரகலாதன், ஜெ.டி டாக்டர் சாந்தகுமாரி, ஆர்.எம். ஓ மருத்துவர் கோதை ராஜேஸ்வரி, முதன்மை குடிமை மருத்துவ அலுவலர்கள் முரளிஸ்ரீ, லதா உள்ளிட்ட டாக்டர்கள் மற்றும் முன்னாள் மருத்துவர்கள் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி வைத்தனர். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.

## திண்டிவனத்தில் முதல்வர் திறந்து வைத்த புதிய கட்டிடத்திற்கு அவசர சிகிச்சை பகுதியை மாற்ற பொதுமக்கள் கோரிக்கை

**திண்டிவனம்:** விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தை அடுத்த பெலாக்குப்பம் ஊராட்சியில் கடந்த 4ம் தேதி நடந்த அரசு விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பல கோடி மதிப்பில் நலத் திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் ரூ.27.51 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட அன்னை இந்திரா காந்தி பேருந்து நிலையம், ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனை கட்டிடம் ஆகியவற்றை காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.



இந்நிலையில் புதிய பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்துகள் இயக்கப்படாததால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாக தெரிவித்துள் ளனர். இதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர்.

இதேபோல் தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட அரசு தலைமை மருத்துவமனையில் விபத்தில் பாதிக்கப்படுவோரின் முக்கிய தேவையான அவசர சிகிச்சை பகுதி (casualty) மாற்றப்படாததால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். இது தவிர அரசு மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள் இல்லை என்பது பெரிய குறையாக உள்ளது.. ஆகவே மாவட்ட ஆட்சியர் உடனடியாக புதிய தலைமை மருத்துவமனை கட்டிடத்தில் மக்களின் முக்கிய தேவையான விபத்துக்கான அவசர சிகிச்சை பிரிவினை உடனடியாக கொண்டு வந்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். இது மட்டுமல்லாமல் காலியாக உள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் பணியிடங்களைவும் நிரப்ப வேண்டும் என பொதுமக் களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைத்துள்ளனர்.

உங்கள் பகுதி நிகழ்ச்சிகளை
செய்தியாக வெளியிட கீழ்கண்ட
வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்புங்கள்
96556 24449

# ஒன்றிய அரசின் பட்ஜெட் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானது

### விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் சேகர் அறிக்கை

**திண்டிவனம்:** விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் டாக்டர் சேகர் விடுத்துள்ள அறிக்கை:



ஒன்றிய அரசு சமீபத்தில் தாக்கல் செய்துள்ள பட்ஜெட், வளர்ச்சி என்ற பெயரில் மாநில உரிமைகளை பறிக்கும், சமூகநீதியை புறக்கணிக்கும், வகையில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் நலன்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எதிரான பட்ஜெட் ஆகும். தமிழ்நாடு நாட்டின் முன்னணி வரி வழங்கும் மாநிலமாக இருந்தும், ஒன்றிய அரசிடமிருந்து பெறும் நிதி அளவில் தொடர்ந்து பின்தள்ளப்படுவது மிகப்பெரிய அநீதி.

தமிழ்நாடு பல துறைகளில் தனித்துவமான, முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில், ஒன்றிய அரசின் திணிப்பு மாநில வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளது.கல்வித் துறையில் பெயரளவில் நிதி உயர்வு காட்டப்பட்டாலும், மாநிலங்களுக்கு நேரடியாக பயனளிக்கும் ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்விக் கொள்கை அடிப்படையிலான திட்டங்கள் மூலம், தமிழ்நாட்டின் சமத்துவ கல்வி மரபும், சமூகநீதிக் கொள்கையும் பாதிக்கப்படுகின்றன. சமூகநலத் திட்டங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடு இல்லாதது, ஏழைகள், பெண்கள், விவசாயிகள், முதியோர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஜிஎஸ்டி, கடன் வரம்பு, நிபந்தனை அடிப்படையிலான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் மூலம் மாநில அரசுகளை கட்டுப்படுத்தும் போக்கு தொடர்வது, இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. ஒன்றிய அரசின் பட்ஜெட் “தமிழ்நாட்டுக்கு எதிரான பட்ஜெட்” என்பது உறுதியாகிறது. தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்க, மாநில சுயாட்சியை பாதுகாக்க, சமூகநீதி மற்றும் மக்கள் நலன்களை காக்க எங்கள் போராட்டம் தொடரும். இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் பிப்.17ம் தேதி தாக்கல்

**சென்னை:** தமிழக சட்டப் பேரவைக்கான தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. எனவே, தமிழக அரசு 2026-27 நிதி ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டி உள்ளது. இந்நிலையில், தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் கடந்த 5ம் தேதி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் ரூ.34,327 கோடி மதிப்பிலான 15 தொழில் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இதுதொடர்பாக திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் சபாநாயகர் அப்பாவு கூறியதாவது: தமிழக சட்டப்பேரவை விதி எண் 26/1ன் கீழ் தமிழக அரசின் சட்டப்பேரவை கூட்டத் தொடர் வரும் 17ம் தேதி காலை 9:30 மணிக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் கூடுகிறது. அன்றைய தினம் 2026 27 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார்.

தொடர்ந்து வரும் 20ம் தேதி பேரவை விதி 193/1ன் கீழ் 2026 27 ஆம் ஆண்டுக்கான முன்பண மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.

இதே போல் பேரவை விதி 189 /1ன் கீழ் 2025 26 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவின மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.

வரும் 17ம் தேதி அலுவல் ஆய்வுக் குழு கூடி சட்டப்பேரவை எத்தனை நாள்கள் நடைபெறும் என்பதை முடிவு செய்யும். சட்டப்பேரவை நிகழ்வுகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. உலகெங்கிலும் இருந்து யார் வேண்டுமானாலும் இணையதளம் மூலம் அதை பார்த்துக் கொள்ள முடியும். அமைச்சரின் பதிலுரைகள், மானிய கோரிக்கைகள், சிறப்பு தீர்மானங்கள் போன்றவை நேரலை செய்யப்படுகிறது. சட்டப்பேரவை விவாதங்களை முழுமையாக நேரலை செய்வது குறித்து சட்டப்பேரவை அலுவல் ஆய்வு குழு முடிவு செய்யும். இவ்வாறு அப்பாவு கூறினார்.

# சென்னை-செங்கல்பட்டு இடையே இயக்கப்படும் மின்சார ரயிலை திண்டிவனம் வரை நீட்டிக்க வேண்டும்

## மத்திய அமைச்சரிடம் சி.வி.சண்முகம் எம்.பி. கோரிக்கை



**திண்டிவனம்:** அதிமுக மாநிலங்களவை உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான சி.வி.சண்முகம், டெல்லியில் மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை நேரில் சந்தித்து பேசினார். அப்போது சில கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தார். அதில் கூறியிருப்பதாவது:

கோவிட் காலத்திற்கு முன்பு திண்டிவனத்தில் நின்று சென்ற பின்வரும் ரயில்கள் மீண்டும் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். (16865-16866) உழவன் எக்ஸ்பிரஸ், (16159-16160) மங்களூர் எக்ஸ்பிரஸ், (12653-12654) ராக்போர்ட் எக்ஸ்பிரஸ், (22153–22154) சேலம் எக்ஸ்பிரஸ், (16176) சென்னை வரை செல்லும் காரைக்கால் எக்ஸ்பிரஸ் ஆகியவை திண்டிவனத்தில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் தற்போது புறநகர் மின்சார ரயில்கள் செங்கல்பட்டு வரை மட்டுமே இயக்கப்படுகின்றன. செங்கல்பட்டிலிருந்து திண்டிவனத்திற்கு சுமார் 65 கி.மீ தூரம் உள்ளது. நன்கு நிறுவப்பட்ட ரயில் வழித்தடம் இருந்தபோதிலும், திண்டிவனத்திற்கு மின்சார ரயில் சேவை இல்லாததால் 400க்கும் மேற்பட்ட கிராம மக்கள் மற்றும் பயணிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். எனவே, இஎம்யு அல்லது மேம்படுத்தப்பட்ட மெமு மின்சார ரயில் சேவைகளை திண்டிவனம் வரை நீட்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியிருந்தார்.

இந்தக் கோரிக்கைகளை விரைந்து பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாக மத்திய ரயில்வே அமைச்சர் உறுதியளித்ததாக சி.வி.சண்முகம் தெரிவித்தார்.

# எம்.என்.ராஜம், எஸ்.பி.முத்துராமனுக்கு கலைத்துறை வித்தகர் விருது



**சென்னை:** ப2024ம் ஆண்டுக்கான கலைத்துறை வித்தகர் விருதுக்கு பழம்பெரும் நடிகை எம்.என். ராஜமும், 2025ம் ஆண்டுக்கான விருதுக்கு திரைப்பட இயக்குநர் எஸ்பி.

முத்துராமனும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவருக்கும் ரொக்கப்பரிசாக தலா ரூ.10 லட்சமும், நினைவுப் பரிசும் வழங்கப்படும். இதற்கான விருது வழங்கும் விழா முதல்வர் தலைமையில் விரை வில் நடைபெற உள்ளது.

# வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரி மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி



**வந்தவாசி:** திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில், தமிழ்நாடு அரசின் உலகம் உங்கள் கையில்"திட்டத்தின் கீழ், மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் விழா கல்லூரி அரங்கத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் ரமணன் மற்றும் கல்லூரி செயலர் பிரியா ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் ருக்மணி தலைமை தாங்கிப் பேசினார். தமிழ்த்துறை தலைவர் ஞானமலர் வரவேற்புரை வழங்கினார்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் தரணிவேந்தன் மற்றும் வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் அம்பேத்குமார் ஆகியோர் கலந்து கொண்டு மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கி சிறப்புரையாற்றினர். சிறப்பு விருந்தினர்கள் பேசுகையில், மாணவிகளின் கல்வி முன்னேற்றத்திற்கும், தொழில்நுட்ப அறிவை வளர்க்கவும், உயர் கல்விக்கும் இந்தத் திட்டம் பெரிதும் உதவும் என தெரிவித்தனர். கல்லூரியில் இறுதியாண்டு படிக்கும் அனைத்து துறை மாணவிகளுக்கும் சேர்ந்து 450 மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டது. தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் கலைச்செல்வி நன்றி கூறினார்.




# யு19 உலக சாம்பியனான இந்திய அணிக்கு ரூ.7.5 கோடி ரொக்கப் பரிசு: பிசிசிஐ அறிவிப்பு




"யு19 உலகக் கோப்பை தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் இளையோர் அணியை எண்ணி ஒட்டுமொத்தமா தேசமும், பிசிசிஐயும் பெருமிதம் அடைகிறது. இந்த தொடரில் ஒரு போட்டியில் கூட இந்திய அணி தோல்வி பெறாமல் சாம்பியின் ஆகியுளளது. அதுவும் இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்திய விதம் அபாரம். அவர்களுக்கு பிசிசிஐ சார்பில் ரூ.7.5 கோடி பரிசு அறிவிக்கிறோம்" என பிசிசிஐ செயலாளர் தேவ்ஜித் சைக்கியா தெரிவித்தார்.

Printed, Published and Owned by Saravanan, Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kitabath khan Bhadur Street, Ellies Road, Chennai-600002,. Published from No.4, Senbaga Street, Thiruvalluvar Nagar, Tindivanam-604001. Editor: Saravanan